RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சமூகவியல் அணுகுமுறை நோக்கில் மண்ணகத்து பூந்துளிகள்

**மோ. ரூபா [அ, *]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600 032, தமிழ்நாடு, இந்தியா

# A Sociological Study of Social Issues in Rajam Krishnan's Mannagaththu Poondhuligal

**M. Roopa [a, *]**

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: m.roopa1982@gmail.com

Received: 09-12-2025
Revised: 24-02-2026
Accepted: 10-03-2026
Published: 17-03-2026

**ABSTRACT**

Rajam Krishnan occupies an important place in Tamil literature for her socially conscious writing and her sustained engagement with the lived realities of marginalized communities. Her novel Mannagaththu Poondhuligal critically portrays several social problems that affected contemporary society, particularly those experienced by women and economically disadvantaged groups. This study adopts a sociological approach to examine the social realities represented in the novel, with particular attention to female infanticide, dowry-related violence, poverty, the vulnerability and lack of social awareness among marginalized communities, and social conflicts. The novel presents these issues not merely as individual or familial problems but as manifestations of wider social structures, cultural practices, economic inequalities, and gender-based discrimination. Krishnan's portrayal of the struggles of impoverished and marginalized people highlights the ways in which prevailing social conditions influence individual lives and community relationships. The study also examines the social consequences of these problems and the tensions they generate within the social order depicted in the novel. By foregrounding the voices and experiences of vulnerable sections of society, Mannagaththu Poondhuligal demonstrates the author's commitment to social awareness and reform. Thus, this study argues that the novel functions as a significant literary representation of social realities and provides critical insights into the gender, economic, and social inequalities prevalent in its historical context.

**Keywords:** Rajam Krishnan, Mannagaththu Poondhuligal, Struggles, Contemporary society

## முன்னுரை

சமூகப் பிரச்சினைகளை புதிய நோக்கில் அணுகி தம் எழுத்தாற்றலால் சமூகத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் ரராஜம் கிருஷ்ணன் அவர்கள். இவருடைய படைப்புகள் ஒவ்வொன்றும் சமூக அவலங்களை எற்றத்தாழ்வுகளை முரண்பாடுகளை வெளிப்படுத்தும் வெள்ளிடைமலையாக உள்ளன. ராஜம் கிருஷ்ணன் எழுதிய மண்ணகத்து பூந்துளிகள் என்னும் நாவல் பெண்சிசு கொலை, வரதட்சணை கொடுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வறுமையின் கோரத் தாண்டவம், மக்களின் அறியாமை ஆகிய சமூகப் பிரச்சினைகளையும் அதன் விளைவுகளையும் விளக்குகிறது, ஆகையால் சமூகவியல் அணுகுமுறை நோக்கில் இந்நாவலை ஆய்வதே ஆய்வுக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## சமூகவியல் அணுகுமுறை

சமூகவியல் அணுகுமுறை என்பது மனித நடத்தைகள் விளைவுகள் பற்றியும் சமூக நிகழ்வுகள் சமூக மாற்றங்கள் பற்றியும் ஆய்வு செய்ய பயன்படும் ஆய்வுமுறை ஆகும். சமூக நிறுவனங்களைப் பற்றிய மனப்பாங்கு மனிதப் பழக்கவழக்கங்களின் முறைப் பற்றியும் பேசுவது சமூகவியல். (இரா.தண்டாயுதம், சமூக நாவல், ப. 25). தமிழ் சமதாயத்தின் நிலையை அறிந்திடச் சங்க இலக்கியங்கள் உதவுவது போலத் தற்காலச் சமுதாயத்தின் மாற்றங்களையும் சிக்கல்களையும் அறிந்து கொள்ள நாவல்கள் உதவுகின்றன. சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமின்றி அதனை மாற்றி அமைக்கும் பணியில் பங்கு பெறுவதுடன் அப்பணி வெற்றிபெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாக துணிந்து ஏற்றுக் கொள்வதும் இன்றைய தேவையாகும். என்று க. கைலாசபதி விளக்கியுள்ளார். (க. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும்) சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையேயான உறவுகளையும் முரண்பாடுகளையும் பற்றித் தெளிவாகக் கூறுவது சமூகவியல். (ச. முருகேசன். சமுதாயப் பார்வை. ப. 120), இத்தகைய சமூகவியல் நோக்கில் இந்த நாவல் ஆராயப்பட்டுள்ளது.

## நாவல் உணர்த்தும் சமூகச் சூழல்

இந்த நாவலில் வரும் அழகாயி, அவள் கணவன் வெள்ளைச்சாமி இருவரும் குணத்தால் நல்லவர்கள். ஆனால் பணத்தால் வறியவர்கள். வறுமையின் கோரத்தாண்டவத்தில் சிக்கி தங்கள் வாழ்க்கையை இழந்தவர்கள். தங்களுடைய மூன்று பெண் குழந்தைகளையும் ஏழ்மைக்கும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பலி கொடுத்தவர்கள். உறவுமுறைகளாக இருந்தாலும் பணம் இருந்தால் மட்டுமே இந்த சமூகம் மதிக்கும் என்பதை, "அந்தப்பெண் பட்டுச்சேலை அணிந்து கழுத்து நிறையப் பவுன் மாலைகளும் கைநிறைய வளையல்களும் அணிந்து கூடம் நிறைய அமர்ந்திருக்கும் பெண்வீட்டுக்காரர்களை உபசரித்துக் கொண்டிருக்கிறாளே ஒழிய இவளை ஏறெடுத்துப் பார்த்து வாய் நிறைய 'வாங்கம்மா' என்று அழைக்கவில்லை." (மண்ணகத்து பூந்துளிகள், ப. 10) என்ற கருத்தின் வாயிலாக விளக்குகிறார். இதை தான் நம் முன்னோர்கள் "பணம் பந்தியிலே குணம் குப்பையிலே" என்று கூறியிருக்கிறார்கள்.

நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் சமூகம் என்ன நினைக்குமோ யார் என்ன சொல்வார்களோ என்று அஞ்சியே பலருடைய வாழ்க்கை பாழ்ப்பட்டுப் போகிறது. அழகாயி தான் காலம் கடந்து கருவுற்றிருப்பதை மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்று அஞ்சுகிறாள். "ஆத்தா ஊர்ச்சனமெல்லாம் மவ ஆளான பெறகு இவெ உண்டாயிருக்ககான்னு ஏசுமோ? நா என்ன செய்வே?" (மண்ணகத்து பூந்துளிகள், ப.46) என்று புலம்புகிறாள். தன் மகள் வயசுகோளாறு காரணமாக தவறு செய்ததை ஊருக்கு பயந்து மருந்து கொடுத்து கலைக்கிறாள். "அடுத்த நாள் வெள்ளி முளைக்கும் முன்பு கரும்பாயி கொல்லை வழியாக ஒரு அலுமினியம் தம்ளரில் அதையும் கொண்டு வருகிறாள். ராக்குவை கண்களை மூடிக் கொண்டு குடிக்கச் செய்கிறாள். சுண்ணாம்பு வாசனையுடன் பால்போல் இருக்கிறதென்று ராக்கு சொல்கிறாள். இரண்டாம் நாளே பலன்." (மண்ணகத்து பூந்துளிகள், பக். 70,71) ஊரின் ஏச்சுக்கும் அவமான சொல்லுக்கும் ஆளான அந்தப் பெண் தன்னை மாய்த்துக் கொள்கிறாள். "ராக்கு.... ராக்கு.... உன்ற துணிச்சல் எனக்கு இல்லியே? தெய்வமாகிப் போனியே?....என்று அழகாயி புலம்புகிறாள்."(மண்ணகத்து பூந்துளிகள், ப. 87) இங்ஙனம் சமூகச் சூழலில் சிக்கித் தவித்த அழகாயி பற்றி நயமுற விளக்குகிறார் ஆசிரியர்.

## வறுமையிலும் செம்மை

ஏழைகள் பணமில்லாமல் இருந்தாலும் நல்ல குணம் படைத்தவர்களாக இருப்பார்கள். உண்மையாக நேர்மையாக இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் அவர்களுக்கு தான் சோதனைகள் அதிகமாக வரும். தன் மகளுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து வைக்க முடியலையே என்ற ஆற்றாமை அழகாயி மனதை வெகுவாக பாதித்தது. ஏமாற்றி பிழைப்பவர்கள் எல்லாம் நன்றாகத் தான் இருக்கிறார்கள். என்ற வருத்தம் அவளுக்கு. "இல்ல அத்தெ....அவளுக்குக் கெருவம். அவ புள்ளங்க ரெண்டு பேரக் கட்டிக்குடுத்திட்டா. நான் வச்சிருக்கிறே...இவ புருசெ மலமேல

ஊறலு வித்து சம்பாதன பண்ணுறாரு. போலிசில புடிச்சா லஞ்சம் கொடுத்திட்டுத் தெரியாம வாரா. எம்புருசெ.... நாயமானவரு." (மண்ணகத்து பூந்துளிகள். ப. 92) என்று அழகாயி தன் கணவனின் நல்ல உள்ளத்தை கூறுவதை ஆசிரியர் நயமுற விளக்கியுள்ளார். அழகாயி கணவன் வெள்ளைச்சாமி வெள்ளை மனம் படைத்தவன். தன் தங்கையின் மகனை தன் மகளுக்கு கட்டி வைக்க கேட்கும் போது தங்கையின் பேராசை வார்த்தைகள் அவன் மனதைப் புண்படுத்தியது. "ஏத்தா, பணமும் காசும் தான் பெரிசுன்னா என்னாலியும் சம்பாரிக்க முடியும். கஞ்சா பயிரு பண்ணி விக்கலாம். கருப்பு வியாபாரம், கள்ளச் சாராயம் பண்ணலாம். ரோக்கியமா சம்பாரிச்சா, இன்னிக்கு விலைவாசில ஒரு பவன் கூடப் போட முடியாது. கூழு குடிச்சாலும் கண்ணியமா மனசாட்சிக்கு விரோதமில்லாம இருக்கணும்...." என்று வருத்தப்பட்டான். (மண்ணகத்து பூந்துளிகள்,ப.77) "இங்கே மனிதனை மனிதன் சுரண்டி உயிர் வாழ்வது மட்டுமில்லை. அதற்கெல்லாம் மேலான சுகபோகங்களை தேவைகளை அநுபவிக்கிறான்." (வேருக்கு நீர், ப. 184) என்று ராஜம் கிருஷ்ணன் மனிதர்களின் ஆசைகளைப் பற்றி எழுதியிருப்பது வெள்ளைச்சாமியின் தங்கைக்கு பொருந்துவதாக உள்ளது.

## பெண்ணடிமைத் தனம்

வளமை இல்லையென்றால் இளமையும் பாழ்பட்டு போகும் என்பதற்கு அழகாயியின் மூத்த மகள் பூவு வாழ்க்கை ஒரு சான்றாகும். வறுமையின் காரணமாக தனக்கு பிடிக்கவில்லையென்றாலும் தன் பெற்றோருக்காக அழகில்லாத குணமில்லாத ஒருவனை திருமணம் செய்ய சம்மதிக்கிறாள். அழகாயிக்கு மனம் ஒப்பில்லை. "எத்தனை சமாதானம் கூறிக் கொண்டாலும் மனம் ஒப்பவில்லை. பூவுவாகப் பார்த்து வேண்டாம் என்று சொல்லுவாள் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது, ஆனால் அவள் மனசொப்பி அவனைக் கட்டிக்கிறேன் என்று இசைந்து விட்டாள்." (மண்ணகத்து பூந்துளிகள், ப. 101) பெரும்பணம் இல்லையென்றால் திருமணம் கூட நாம் நினைத்தாற்போல அமையாது. அப்படி திருமணம் செய்தும் அவள் வாழ்க்கை நல்ல முறையில் அமையவில்லை. " அன்று பூவு வருகையில் அழுது முகம் வீங்கி இருக்கிறது. காதுககளில் இவள் ஆசையோடு போட்ட குடை சிமிக்கி இல்லை." (மண்ணகத்து பூந்துளிகள், ப. 107) பூவுவின் கணவன் பிறந்த வீட்டின் வறுமையை சுட்டிக் காட்டி அவளைக் கொடுமைப்படுத்தினான். "சோறாக்கி வைக்காம, ஆத்தா வூட்ல வந்து ஆட்டம் போடுற நாயீ ". (மண்ணகத்து பூந்துளிகள், ப. 109) என்று மரியாதை இல்லாமல் பேசுகிறான். "பணத்துக்காகவும் நகைக்காகவும் மணம் செய்து கொள்பவர்களின் வாழ்வு உண்மையில் எப்படி அமைதியும் ஆனந்தமும் கூடியதாக இருக்க முடியும்? " (ரோஜா இதழ்கள், ப.172). அதனால் தான் அவள் வாழ்க்கையும் அமைதி இல்லாமல் போய்விட்டது. மருமகனைக் கொன்று விட்டு சிறைக்குச் சென்றான் வெள்ளைச்சாமி. தன் மகள்களை காப்பாற்ற வழி தெரியாமல் உறவுகளை நாடிச் சென்ற அழகாயி அவமானப்படுத்தப்பட்டாள். தங்களால் அம்மாவுக்கு தொந்தரவு என்று நினைத்த பிள்ளைகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். "எங்கண்ணுங்களா என்னப் பாவியாக்கிட்டுப் போயிட்டீங்களா?" என்று அலறி விழுகிறாள் அழகாயி.

## முடிவுரை

சமூக நாவல்கள் வாயிலாக சமூகத்தின் தனிமனித இடர்பாடுகளை, ஏற்றத்தாழ்வு களை, போராட்டங்களை விளக்குவதன் மூலம் சமகால சமூகச் சூழலை உலகுக்கு வெளிக்காட்டியுள்ளார் இராஜம் கிருஷ்ணன் அவர்கள். இது போன்ற நாவல்கள் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

## References


Kailasapathy, K. (2021), Samugaviyalum Ilakkiyamum, Kalachuvadu padhippagam, Chennai, India.

Murugesan, S. Sagithya Academy Viruthu petra Pudhinangalil Samudhaya Paarvai, Agamadhu Vaniga Valagam, Chennai, India.

Rajam Krishnan, K. (1972), Verukku Neer, Thamizh Writers Cooperating Society, Chennai, India.

Rajam Krishnan, K. (1988), Mannakathu Poonthuligal, Thagam Pathippagam, 1s t Edition, Chennai, India.

Rajam Krishnan, K. (2001), Roja Ithazhgal, Thagam Pathippagam, 3rd Edition, Chennai, India.

Thandayutham, R. Samuga Novel, Thamizh Puthagalayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License